பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 07 2024 **SATURDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. Crowdstrike மென்பொருளில் ஏற்பட்டுள்ள பிரச்சினை விரைவில் சரிசெய்யப்படும் என்று மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி திரு சத்ய நாராயண நடேலா தெரிவித்துள்ளார்.

2. இந்தியா – யுக்ரைன் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் உயர்த்தப்பட்டுள்ள மின்கட்டண உயர்வை மாநில அரசு திரும்பப்பெற வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. கர்நாடகா மற்றும் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்துவருவதையடுத்து ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

5. ஆசியக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

<<<<<>>>>>

மைக்ரோசாஃப்ட் மென்பொருள் தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமான போக்குவரத்து சேவைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் சுமார் ஆயிரத்து 400 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டது

மைக்ரோசாஃப்ட் 'Crowdstrike'-ல் ஏற்பட்ட பாதிப்புகாரணமாக தில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில், பல்வேறு விமானங்களின் புறப்பாடும், வருகையும் வெகுவாக பாதிக்கப்பட்டது.

இந்த பிரச்சினை கண்டறியப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி திரு சத்ய நாராயண நடேலா, விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், இந்த பிரச்சினையை களைவதற்கு தேவையான அனைத்து

நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருவதாகவும், உடனடியாக பழைய நிலைமை திரும்புவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினைக்கு மைக்ரோசாஃப்ட் மன்னிப்பு தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாடு முழுவதும் 200-க்கும் மேற்பட்ட விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டது. சில விமானங்களின் சேவையும் ரத்து செய்யப்பட்டது.

சென்னை விமான நிலையத்திலும் பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

இன்றும் சென்னை விமான நிலையத்தில் 10 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

இந்தியா – யுக்ரைன் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், யுக்ரைனின் வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து இந்தியா – யுக்ரைன் இடையிலான உறவுகள் குறித்து விவாதித்ததாக வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்துள்ளார்.

தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி ரஷ்ய பயணத்தின்போது ரஷ்யா – யுக்ரைன் இடையிலான சண்டையின் காரணமாக அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதாகவும், அதனை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ரஷ்ய அதிபர் திரு வினாடிமீர் புட்டினிடம் வலியுறுத்தியதாகவும் தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாட்டின் பாதுகாப்பு அமைப்புகள் தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளின் உயர்மட்டக் கூட்டம் திரு அமித் ஷா தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மத்திய புலனாய்வு துறைகளின் நடவடிக்கைகள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

அப்போது பேசிய அவர், அனைத்து அமைப்புகளும் ஒன்றாக இணைந்து, தீவிரவாத நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தும் விதத்தில் கிடைக்கும் தகவல்களை அனைத்து அமைப்புகளும் தேவைக்கேற்ப பரிமாறிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

போதைப்பொருட்களுக்கு எதிராகவும், சைபர் குற்றங்களை தடுக்கும் விதத்திலும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

துடிப்புள்ள இளம் அதிகாரிகளும், தொழில்நுட்ப ரீதியில் திறன் வாய்ந்தவர்களையும் இணைத்து செயல்படுவதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று திரு அமித் ஷா வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் மின் கட்டண உயர்வு மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் புஞ்சைப்புளியம்பட்டியில் நடைபெற்ற வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், திமுக அரசு அடிக்கடி மின் கட்டண உயர்வை அறிவித்து வருவதாகவும், ஏற்கனவே உயர்த்திய மின் கட்டண உயர்வால் ஈரோடு, கோவை, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பல தொழில்கள் மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில், மீண்டும் மின்கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், இந்த கட்டண உயர்வை திரும்பப்பெற வேண்டும் என்றும் திரு எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, கோவை மாவட்டம் அன்னூர் பகுதியில் பேசிய அவர், தேர்தலில் தாம் அளித்த வாக்குறுதிபடி, அன்னூர் மற்றும் அவிநாசி பகுதிகளில் மிகப்பெரிய ஜவுளிப்பூங்கா அமைக்கப்படும் என்றும், சேலம் – அன்னூர் – மேட்டுப்பாளையம் வழியாக நான்குவழிச்சாலை அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அவிநாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கேள்விக்குரியாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

அவிநாசி – அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்ற மாநில அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் திரு எல். முருகன் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

பூட்டான் பிரதமர் திரு Tshering Tobgay-ஐ, வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி சந்தித்து இருநாடுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து விவாதித்தார்.

பூட்டான் நாட்டிற்கு சென்றுள்ள வெளியுறவுத்துறை செயலாளர், இந்தியா – பூட்டான் இடையிலான நட்புறவு தொடர்ந்து வலுப்பெற்றிருப்பதாகவும், இரு நாடுகளுக்கு இடையிலான கலாச்சார உறவுகள் மேலும் அதிகரிக்கப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு D N Dhungyel-லையும் சந்தித்து திரு விக்ரம் மிஸ்ரி உரையாடினார்.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் உள்ள அமர்நாத் குகைக்கோவிலுக்கு இன்று காலை 3 ஆயிரத்து 471 யாத்ரிகர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து, குகைக்கோவிலில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

யாத்ரிகர்கள் இன்று அதிகாலை 114 வாகனங்களில் அழைத்து செல்லப்பட்டனர்.

<<<<<>>>>>

வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று வடமேற்கு மற்றும் அதனையொட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒடிஷா மற்றும் வட ஆந்திர கடலோர பகுதிகளையொட்டி நிலவுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று காலை ஒடிஷா மாநிலம் பூரிக்கு அருகே கரையை கடக்கக்கூடும் என்றும், இதனால் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல், மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், மாநிலத்தில் வரும் 21 முதல் 25-ஆம் தேதிவரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டிய தென் தமிழக கடலோர பகுதிகளில் இன்றும் நாளையும் மணிக்கு 35 முதல் 45 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும், எனவே இந்த பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, கர்நாடகா மற்றும் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் கனமழை பெய்துவருவதையடுத்து, ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று காலை ஆறு மணிநிலவரப்படி வினாடிக்கு சுமார் 61 ஆயிரம் கனஅடிநீர் வந்துகொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - தருமபுரி தண்டபானி – 41 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள வன்முறையைத் தொடர்ந்து, அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ராணுவத்தினர் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அரசு பணியில் இடஒதுக்கீடு கோரி மாணவர்கள் நடத்திய போராட்டம் நாடு முழுவதும் பரவியுள்ளது.

இதுவரை காவல்துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற சண்டையில் 105 பேர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக பிரதமராக இருக்கும் திருமதி ஷேக் ஹசினாவுக்கு இந்த பிரச்சினை மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசியக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

இலங்கையின் தம்புலாவில் நடைபெற்ற “ஏ” பிரிவு லீக் ஆட்டத்தில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பாகிஸ்தான் அணி 19 புள்ளி இரண்டு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 108 ரன் மட்டுமே எடுத்தது.

பின்னர் விளையாடிய இந்திய அணி 14 புள்ளி ஒரு ஓவரில், மூன்று விக்கெட் இழப்பிற்கு 109 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

-------------

தமிழகத்தை சேர்ந்த கால்பந்து வீராங்கனை இந்துமதி கதிரேசனுக்கு சிறந்த கால்பந்து வீராங்கனை விருது வழங்கப்படுவதாக இந்திய கால்பந்து கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

2023-24-ஆம் ஆண்டிற்கான சிறந்த கால்பந்து வீராங்கனை விருது இவருக்கு வழங்கப்படவுள்ளது.

---------------

ஸ்வீடிஷ் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் அரையிறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் ரபேல் நடால் - குரேஷியாவின் Duje Ajdukovic –ஐ இன்று எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் பிரான்ஸ் இணை, கஜகஸ்தான் இணையை எதிர்கொள்கிறது.

<<<<<END>>>>>